# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 47

# கிறிஸ்தவ ஞானஸ்நானம்



Christian Baptism

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# கிறிஸ்தவ ஞானஸ்நானம்

# The Christian Baptism



கிறிஸ்து இயேசுவுக்குள் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே,

தேவனுடைய மாபெரும் தெய்வீகத் திட்டங்களை ஆழமாகவும், விரிவாகவும் அறிந்து, 49வது வகுப்பிற்குள் கடந்து வந்திருக்கிறோம். தேவனுடைய பெரிதான கிருபையினால் அறியாமையாகிய "அந்தகாரத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, அவருடைய ஆச்சரியமான ஒளிக்குள்ளாக" (1பேதுரு2:9) அழைத்து வரப்பட்டிருப்பதை உணர்ந்திருப்பீர்கள்.

வேத வசனங்களிலிருந்து தேவனுடைய "பெரிதான இரட்சிப்பையும்" நாம் புரிந்துகொண்டிருக்கிறோம். இந்த மேன்மையான இரட்சிப்பை இந்த சுவிசேஷயுகத்தில், தம் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் சீஷர்களாகிய கிறிஸ்தவர்களுக்கு தேவன் அளித்திருக்கிறார்.

இன்றைய பாடத்தில் நாம் தேவனுடைய வார்த்தைகளில் காணப்படும் கிறிஸ்தவ ஞானஸ்நானம் குறித்து காண்போம்.

ஞானஸ்நானத்தைக் குறித்து வேத வசனங்களில் நாம் வாசிக்கும்போது -

**எபேசியர் 4:5**

***"ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்"***

கிறிஸ்துவின் "ஒரே சரீரத்திற்கு" ஒரே ஞானஸ்நானம் இருக்கிறது என்று வாசித்தோம். இங்கு கூறப்பட்டிருக்கிற ஒரே "ஞானஸ்நானம்" என்பது எதைக் குறிக்கிறது?

இயேசுகிறிஸ்துவின் சபையானது "ஜீவனுள்ள தேவனுடைய" ஒரே சபையாக இருப்பதை நாம் ஏற்கனவே மூன்று பாடங்களில் பார்த்திருக்கிறோம். இந்த தேவ சபையைக்குறித்து பின்வரும் வசனத்தில் கூறப்பட்டுள்ளதைக் காண்போம் -

**1தீமோத்தேயு3:5**

***"..தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன். அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது"***

மேலும் இந்த மகிமையான சபை மூன்று நிலைகளில் உருவாக்கப்படுவதை பின்வரும் வசனம் விவரிக்கிறது -

**வெளிப்படுத்தல் 17:14**

***"இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம்பண்ணுவார்கள். ஆட்டுக்குட்டியானவர்***

***கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார். அவரோடுகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும், தெரிந்து கொள்ளப்பட்டவர்களும், உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் என்றான்"***



சபையானது அடுத்தடுத்து தொடர்ச்சியான மூன்று வளர்ச்சிப் படிகளைக் கடப்பதன்மூலம் தெரிந்தெடுக்கப்படுவதை இந்த வசனம் விளக்குகிறது.

**- கிறிஸ்தவ வளர்ச்சியின் முதலாம் நிலை என்பது,**

இயேசுவின் மீது விசுவாசம் வைத்து அவருடைய விசுவாசிகளாக மாறுவது என்று பார்த்தோம். இந்த விசுவாசிகள் நிலையில் அநேகர் இருப்பதை பின்வரும் வசனத்தில் காண்போம் -

**மத்தேயு 22:14**

***"..அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர் சிலர்.."***
***விசுவாசிகள் ஆவதற்கு அநேகர் அழைக்கப்பட்டாலும்,***
**'தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக"**

மாறுகிறவர்கள் சிலர் என்று கண்டோம்.

இந்த தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் யார் எனில், இயேசுவை விசுவாசிப்பதன் ஆழமான பொருளையும், நோக்கத்தையும் புரிந்துகொண்டவர்கள் ஆவர்.

**பிலிப்பியர் 1:29**

***"ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாய்ப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது"***

அவர் நிமித்தமாகப் பாடுபடவேண்டும். எப்படிப் பாடுபடவேண்டும்? அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றுபவர்களாக மாறுவதன் மூலமாகும். இதுவே கிறிஸ்தவனாக இருக்க "அழைக்கப்பட்டதன்" நோக்கமாகும்.

**1பேதுரு 2:21**

***"இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடையஅடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்"***



இங்கு அவரைப் பின்பற்ற விரும்புவோர்க்கு எழும் கேள்வி - இயேசுவின் அடிச்சுவடுகள் என்றால் என்ன? என்பதே.

இதற்கான விடையை பின்வருமாறு எளிமையாகக் கூறலாம்

அவருடைய அடிச்சுவடு என்பது, **"யோர்தானில்"** துவங்கி, **"கல்வாரியில்"** முடிவடைந்தது.

இன்று நாம் யோர்தானில் துவங்கிய அவரது முதல் அடிச்சுவட்டை குறித்து தியானிக்க இருக்கிறோம் -

இது ***"கிறிஸ்துவினுடைய ஞானஸ்நானம்"*** ஆகும்.

இது வேத வசனங்களில் பதிவாகியிருப்பதை நாம் வாசிக்கிறோம் -

**மத்தேயு 3:13**

***"அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார்"***

இங்கு கவனிக்கவேண்டியது என்னவெனில், தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெற வந்த இயேசுவை யோவான் ஸ்நானகன் தடைபண்ணுவதாக நாம் வாசிப்பதாகும் -

**மத்தேயு 3:14**

***"யோவான் அவருக்குத் தடைசெய்து - நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான்"***

இயேசுவிற்கு "ஞானஸ்நானம் கொடுக்க" தான் முற்றிலும் தகுதியற்றவன் என்று யோவான் ஸ்நானகன் எண்ணுவதைக் காண்கிறோம்.

அதற்கு பதிலாக இயேசு அவரிடம் கூறிய பதிலை வாசிக்கலாம் -

**மத்தேயு 3:15**

***"இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக.. இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான்"***




இயேசுவினுடைய இந்த வார்த்தைகள் யோவான் உணர்ந்துகொள்ளமுடியாத ஒன்றாகும். ஏனெனில் கிறிஸ்து தம் சரீரமாகிய சபைக்கு தான் தலையாக இருக்கப்போவதையே இங்கு குறிப்பிடுகிறார். மேலும் அந்த சபைக்கு "முன்மாதிரிகை" விட்டுச்செல்வது அவருடைய கடமையாகும்.

இதன்மூலம் அவரது சரீரமாகிய சபை அவருடைய அடிச்சுவடுகளில் அவரைப் பின்பற்றிச்செல்லமுடியும் என்பதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**1பேதுரு 2:21**

***"இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்"***

ஞானஸ்நானத்தில் துவங்கிய இந்த "முன்மாதிரி"யின் முக்கியத்துவம் என்ன? அவர் ஞானஸ்நானம் பெற்றபொழுது வார்த்தைகள் ஏதும் கூறினதாக நான்கு சுவிசேஷங்களில் சொல்லப்படவில்லை.

ஆனால் அவருடைய இருதயத்தின் நினைவுகள் பின்வரும் வசனத்தில் வெளிப்படுவதைக் காண்கிறோம் -

**எபிரேயர் 10: 7**

***"அப்பொழுது நான் - தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன், புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்"***

ஆம். இயேசு ஞானஸ்நானத்தில் முழுகினபோது, அவரது இருதயத்தில் இருந்த வார்த்தைகள் இதுவேயாகும். அவர் தேவசித்தத்துக்குள்ளாக முழுகியதை இங்கு நாம் அறிகிறோம்.

ஏனென்றால் தன்னுடைய சுயசித்தத்தை வெறுத்து.. அதுமுதல் தேவ சித்தம் செய்ய தம்மை ஒப்புக்கொடுத்தார்.

இவ்விதமாக தேவனுடைய சித்தம் செய்ய அவர் ஏற்படுத்தின இந்த ஒப்பந்தத்தை தம் ஞானஸ்நான "முழுக்குதலின்மூலம" அடையாளப்படுத்தினார்.

ஞானஸ்நானம் என்ற வார்த்தை ***"பேப்டைஸோ"*** (Baptiso) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது. இதற்கு முழுகுதல்" என்று பொருளாகும்.

தேவனோடு இயேசு ஏற்படுத்தின இந்த உடன்படிக்கை அல்லது ஒப்பந்தமானது... யோர்தான் நதியில் துவங்கி, அவருடைய மரணம் வரையிலான ஜீவ காலத்தை உள்ளடக்கியதாகும். இதை இயேசுவின் வார்த்தைகளில் தெளிவாக வாசிக்கிறோம் -

**லூக்கா 12:50**

***"ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு. அதுமுடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்.."***

மரணபரியந்தம் தேவசித்தத்தை முழுமையாக நிறைவேற்றுதில்.. அவர் முழுகவேண்டியது அவசியமாயிருந்தது.

மேலும் தம்மை பின்பற்ற விரும்புகிற ஒவ்வொருவரும் இந்த "ஞானஸ்நானத்தை" பெற்றுக்கொள்ள தற்போது இயேசு அழைக்கிறார். இதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**மத்தேயு 16:24**

***"அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி - ஒருவன் என்னைப் பின்பற்றி வரவிரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்"***

இயேசு தாம் முதன் முதலில் செய்ததை இப்பொழுது அவரைப் பின்பற்றுகிற அனைவரும் செய்யும்படி அழைக்கிறார். இதை மிகத் தெளிவாக பின்வரும் வசனத்தில் காண்கிறோம் -



**மத்தேயு 10:38**

***"இயேசு அவர்களைநோக்கி - நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்கே தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார்"***




பரலோக பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு.. அவர்களுடைய சுயசித்தத்தை வெறுப்பதாகும். இதுவே எபேசியர் 4:5ல் சொல்லப்பட்ட ஒரே "ஞானஸ்நானமாகும்"

இதுவெ "முழுகுதல்" அல்லது பேப்டைஸோ(Baptiso) ஆகம். இதுவே "சில" கிறிஸ்தவர்கள் தற்போது புரிந்துகொள்ளவும், உணரவும் சிலாக்கியம்பெற்ற அந்த.. "ஒப்பந்தம்" அல்லது "உடன்படிக்கையாகும்". இந்த இரகசியமான உடன்படிக்கையைக் குறித்து வாசிக்கையில் -

### *சங்கீதம் 25:14*

***"கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது. அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்"***

இது ஒரு "உடன்படிக்கையாக" அல்லது "ஒப்பந்தமாக" இருப்பதை பின்வரும் வசனத்தில் அறிகிறோம் -

### *சங்கீதம் 50:5*

***"பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்"***

ஆம். இது ஒரு "பலியினாலான உடன்படிக்கையாகும்". பரலோகப் பிதாவின் சித்தத்தை செய்வதற்காக.. ஒருவருடைய சுயசித்தத்தை - அதாவது மனித சித்தத்தை பலிசெலுத்துவதாகும். இந்த பலியே அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிற பலியாகும்.

### *ரோமர் 12:1*

***"அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை"***

இது ஒரு "..கட்டாயமோ அல்லது திணிக்கப்படுவதாகவோ" இல்லாமல்..மாறாக.. இரு ஒரு "அழைப்பாகவும்.. வேண்டுகோளாகவும்" இருக்கிறது.

இங்கு ***"இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்"*** என்ற வார்த்தைகளை கவனிக்கவும். வெறும் விசுவாசிகளாக இருந்த "சகோதரர்களை", அப்போஸ்தலனாகிய பவுல் .. தாமாக முன்வந்து கிறிஸ்தவ வாழ்க்கையின் அடுத்த அடியாகிய முக்கியமான முடிவை எடுக்கவும் ஊக்குவிக்கிறார்.

அது.. இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதாகும்.

இங்கு "ஜீவபலியாக" என்று சொல்வதன்மூலம், அப்போஸ்தலன் கூற விரும்புவது என்ன?

***"..உங்கள் சரீரங்களை"*** - அதன் உரிமைகள், கனவுகள் மற்றும் குறிக்கோள்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மாம்சீக வாழ்க்கையை குறிக்கிறது. இது தேவனுடைய சித்தம்

செய்வதற்காக ஏறெடுக்கப்படும் சுயசித்தத்தை வெறுப்பதுடன்கூடிய பலியாக தேவனுக்கு செலுத்தப்படுகிறது.

இது மரணபரியந்தம் கர்த்தர் நிறைவேற்றிய விதத்திலும், அதே ஆவியிலும் ஏறெடுக்கப்படுகிறது. இவ்விதமாக, இதன்பின்பே ஒரு கிறிஸ்தவன், இயேசுவின் "மரணத்திற்குள்" பிரவேசிப்பதை நாம் வாசிக்கிறோம் -

**ரோமர் 6:3**

***"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?***

ஆம். இது சுயசித்தத்தை பலிசெலுத்துகிற மரணமாகும். இது பின்வரும் வசனத்திலும் விவரிக்கப்பட்டுள்ளதை காண்கிறோம் -

**கொலோசெயர் 3:3**

***"ஏனென்றால் நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது"***

இங்கு "***ஜீவபலி***" என்பது.. "மரித்திருந்து" அதே சமயம் உண்மையில் உயிரோடு "ஜீவித்து" இருப்பதையும் குறிக்கிறது.

ஆம். பிதாவின் சித்தம் செய்வதற்காக ஒப்புக்கொடுக்கப்பட்ட(அல்லது முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட) வாழ்க்கையைக் குறிக்கிறது.

மேலும் இதுஒன்றே இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை பெறுவதற்கான வழி என்பதை இயேசு உறுதிப்படுத்துகிறார் -

**மத்தேயு 7:21**

***"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி - கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை"***

இது எளியதும், தெளிவானதுமாக தோன்றுகிறது.

"கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்த விசுவாசியாக" மாத்திரம் இருப்பது பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கும், "***பரலோக பரிசை***" பெறுவதற்கும் போதுமானது அல்ல. மாறாக அதற்கு மேலும் ஒரு படி செல்லவேண்டும்.

ஆம்.. பிதாவினுடைய சித்தம் செய்வதேயாகும்.

இங்கு"***கர்த்தாவே..கர்த்தாவே***" என்று இருமுறை குறிப்பிடப்பட்டிருப்பது - பெயர் கிறிஸ்தவத்தின் இரண்டு பாகங்களாகிய - 'ரோமன் கத்தோலிக்கம்" மற்றும் 'புராட்டஸ்டன்ட்" அமைப்புகளை குறிக்கும்.

இவ்விதமாக ஒரு.. ரோமன் கத்தோலிக்கனாகவோ.. அல்லது ஒரு புராட்டஸ்டன்டாகவோ இருந்து இயேசுவின் மீது விசுவாசம் வைப்பது மாத்திரம "பரலோக பரிசை" பெற்றுக்கொள்ளப் போதுமானதல்ல. மாறாக, அதற்கு பிதாவினுடைய சித்தத்தை செய்வது அவசியம் என்பதை இந்த வசனம் தெளிவுபடுத்துகிறது.

இப்படியிருக்க .. பிதாவின் சித்தம் என்ன? இதுகுறித்து பின்வரும் வசனத்தில் தெளிவாக

வாசிக்கிறோம் -

**ரோமர் 8:29**

***" தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ, அவர்களைத் தனது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்"***

ஆம். தற்போது 'தமது குமாரனுடைய சாயலுக்கு" ஒப்பாக- அதாவது.. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சாயலாக மாறுவதற்கு முன்வருகிறவர்களையே பிதா எதிர்பார்க்கிறவராகவும், அழைக்கிறவராகவும் இருக்கிறார்.

மேலும் இது "***அவருடைய அடிச்சுவடுகளில்***"மரணபரியந்தம்.. சுயத்தை பலிகொடுத்து.. பின்பற்றுவதன்மூலம் மாத்திரமே முடியும். இதுவே ஒரே ஞானஸ்நானம் ஆகும்.

இங்கு பொதுவாக கேட்கப்படுகிற ஒரு கேள்வியை நாம் கவனிக்கவேண்டும். அது - இதற்கு முன் .. பல சபைகளில் ஏற்கனவே எடுக்கப்பட்ட "ஒன்று" அல்லது "அநேக" ஞானஸ்நானங்கள் எதைக் குறிக்கிறது? அல்லது .. நான் மறுபடியும் ஞானஸ்நானம் எடுக்கவேண்டுமா?

இதற்கான விடை எளிமையாக இருக்கிறது. இன்று வேதத்தின் இந்த சத்தியமாகிய -"ஒரே ஞானஸ்நானம்" எடுத்ததாக கூறமுடியாது. அது மாத்திரமல்ல கர்த்தரோடு(சங்கீதம் 25:14) செய்கிற "இரகசியமான உடன்படிக்கையைப்" பற்றின அறிவு.. பொதுவாக காணப்படுவதில்லை. இது தவிர இன்றைய சபைகளில் கொடுக்கப்படும் ஞானஸ்நானத்தைக் குறித்து சில உதாரணங்களைக் காண்போம் -

## ரோமன் கத்தோலிக்க சபைகள்



ரோமன் கத்தோலிக்கர் மத்தியில் "ஞானஸ்நானம்" என்பது .. சபையின் அங்கத்தினர் ஆவதற்கான வழிமுறையாக கருதப்படுகிறது. அது தன்னுடைய செயல்களைப் பற்றின அறிவு இல்லாத, ஞானஸ்நானம் எதைக் குறிக்கிறது என்று அறியாத குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகிறது. மேலும் "ஞானஸ்நானம்" என்பது தண்ணீர் தெளிப்பதன்மூலம் கொடுக்கப்படுகிறது. மாறாக தண்ணீரில் மூழ்குவதின் மூலம் அல்ல.

## புராட்டஸ்டன்ட் சபைகள்



புராட்டஸ்டன்ட் பிரிவினர் மத்தியில் ஞானஸ்நானம் என்பது சபையின் அங்கத்தினர் ஆவதற்கான வழிமுறையாக மாத்திரம் கருதப்படாமல்... அதற்கு மேலும் ஒருபடிசென்று பாவங்களுக்கான மன்னிப்பை பெறும் வழிமுறையாக கருதப்படுகிறது. சில சபைகளில் உதாரணமாக பெந்தெகொஸ்தே சபைகளில் "ஞானஸ்நானம்" என்பது இயேசுவிடம் ஜீவனை அர்ப்பணிப்பதாக உணரப்படுகிறது.

சில புராட்டஸ்டன்ட் சபைகளில் குழந்தைகளுக்கு தண்ணீர் தெளிப்பின் மூலம் "ஞானஸ்நானம்"

கொடுக்கப்பட்டாலும் (உதாரணம் CSI &CNI) ..பெரும்பாலான புராட்டஸ்டன்ட் சபைகளில் "ஞானஸ்நானம்" வயது வந்தவர்களுக்கு "தண்ணீர் முழுக்கின்" மூலமே கொடுக்கப்படுகிறது.

- இருந்தபோதிலும் பெயர் சபையின் இவ்விரு பிரிவுகளிலும்..
- **இந்த இரகசியமான உடன்படிக்கையைப் பற்றின அறிவும்**
- **அதைப் பற்றின சத்தியமும்..**
- **அதைப்பற்றிய புரிந்து கொள்ளுதலும் இல்லாமல் இருப்பதை கவனிக்கவேண்டும்**

இது ஏனென்றால், அந்திக்கிறிஸ்து அமைப்பு தோன்றின நாள் முதல் -**'மூன்று படி மாவில்"** சேர்க்கப்பட்ட **'புளித்தமாவினால்"(மத்தேயு13:33)** இந்த விலையேறப்பெற்ற சத்தியங்கள் காணப்படாமல்போயின.

ஆகையால் ஞானஸ்நானத்தை "மறுபடியும்" எடுப்பது முக்கியமல்ல. மாறாக, அந்த ஒரே உண்மையான" ஞானஸ்நானத்தை முதன் முறையாக எடுப்பதே முக்கியமாகும்.

இங்கு பொதுவாக கேட்கப்படுகிற கேள்வி என்னவெனில் ..

**- அந்த ஞானஸ்நானத்தை நாம் எடுக்கமுடியுமா?**

**- மேலும் அதை இயேசு நிறைவேற்றியதுபோல் என்னால் நிறைவேற்றமுடியுமா?**

இது அநேக சகோதர சகோதரிகளுடைய இருதயத்தில் விதைக்கப்படும் 'சந்தேகத்தின் விதையாக" இருக்கிறது. இது சாத்தானால் விதைக்கப்படுகிறது.

ஆனால் இந்த சந்தேகத்திற்கான விடையை கர்த்தராகிய இயேசு கொடுத்திருப்பதை வாசிக்கிறோம் -

***மாற்கு 10:39***

***"அதற்கு அவர்கள் - கூடும் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி - நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்"***

தம்முடைய அடிச்சுவடுகளை பின்பற்ற முடிவெடுக்கிற சபையின் அங்கத்தினராகிய ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் கர்த்தர் அளிக்கும் உறுதிமொழியாக இது இருக்கிறது.

ஆம். நீங்கள் இயேசுவை நம்புகிறீர்களா? அல்லது சாத்தானை நம்புகிறீர்களா?

இறுதியாக கிறிஸ்தவர்களின் "ஒரே ஞானஸ்நானத்தையும்" அந்த "இரகசியமான உடன்படிக்கையையும் பற்றின சத்தியத்தை அறிந்து ... அதை "அவருடைய கிருபையின் மூலம்" நிறைவேற்றமுடியும் என்ற கர்த்தருடைய உறுதிமொழியையும் அறிந்தபிறகு, இந்த எண்ணம் கடைசியாக தோன்றுவதை காண்கிறோம் -

***நான் ஒரு பாவி.. முதலில் என்னுடைய பாவம் நிறைந்த வார்த்தைகள், பழக்க வழக்கங்கள் மற்றும் கிரியைகளிலிருந்து என்னைநானே சுத்திகரித்து... பின்பு இந்த "பலியினாலான உடன்படிக்கையை" செய்கிறேன். ஆம், அதை இப்பொழுது செய்ய நான் தகுதியானவன் அல்ல.***

ஆம். இது பொதுவாக அனைவருக்கும் தோன்றுகிறதாக இருக்கிறது. ஏனென்றால் நாம் அனைவரும் பாவிகளே.

ஆனால் இதைக் குறித்து பரலோகப் பிதா என்ன சொல்கிறார் என்பதை அவருடைய வார்த்தைகளில் வாசிக்கலாம் -

**யாத்திராகமம் 20:26**

***"என் பலிபீடத்தின்மேல் உன் நிர்வாணம் காணப்படாதபடிக்கு, படிகளால் அதின்மேல் ஏறவும் வேண்டாம்.."***

இதுவே கர்த்தருடைய பதிலாக இருக்கிறது. 'சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து" பார்க்கையில் இது அடையாள பாஷையில் இருப்பதால், இதன் பொருளை இப்பொழுது புரிந்துகொள்ள முயற்சிப்போம் -


Bronze Altar

**"என் பலிபீடத்தின்மேல்"** இந்த சுவிசேஷயுகத்தில் ஒருவர் தன்னை 'விசேஷித்த பலியாக"(எபிரேயர் 9:23) தேவனிடத்தில் அர்ப்பணிப்பதற்கான மாபெரும் சிலாக்கியத்தை குறிக்கிறது.

**"படிகளால் அதின்மேல் ஏறவும்"** இது அந்த பலிபீடத்தை குறித்து பேசப்படுவதாகும். எனவே இது ஒப்புக்கொடுப்பதைக் குறிக்கவேண்டும். அதாவது ஒருவர் தன் பாவ நிலையிலிருந்து முன்னேற்றம் அடைவதை.. அல்லது நீதியை நோக்கி ஏறெடுக்கப்படும் தனிப்பட்ட முயற்சிகளாகிய "ஏறவதை" குறிக்கிறது.

இம் முயற்சிகள் வெற்றிபெறுமா? இதைக் குறித்த கர்த்தருடைய வார்த்தையை நாம் வாசிக்கலாம் -

**"உன் நிர்வாணம் காணப்படாதபடிக்கு.."** - ஆம் சகோதர சகோதரிகளே, இந்த சத்தியத்திற்குள்ளாக நம்மை அழைத்த கனப்பொழுதிலிருந்து.. நம்முடைய பாவநிலை கர்த்தரால் அறியப்பட்டதாகவே இருக்கிறது. இதை பின்வரும் வசனத்தில் காண்கிறோம் -

**எபிரேயர் 4:13**

***"அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை, சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்"***

அழைக்கப்பட்ட அனைவருடைய விழுந்துபோன மற்றும் பாவ நிலைமையும், அவர்கள் அனைவரின் மாம்சீக மற்றும் மனநிலையில் காணப்படுகிற பெலவீனங்களை கர்த்தர் அறிந்திருக்கிறார். அவர் ஒருவருடைய இருதயத்தின் நினைவுகள் மற்றும் வார்த்தைகள் மற்றும் கிரியைகள் அனைத்தையும் அறிந்திருக்கிறார்.

மேலும், அவரால் மாத்திரமே அந்த பாவங்களை மூடவும் அவைகளை - இயேசுவினுடைய இரத்தத்தின் விலைக்கிரயத்தின்மீது வைக்கப்படும் விசுவாசத்தின் மூலம் பெறப்படுகிற நீதியினாலும்,'சத்திய வார்த்தைகளினாலும்" **(யோவான் 17:17)** உண்டாகும்

பரிசுத்தமாக்குதலின்மூலம் குணமாக்கமுடியும்.

ஆம். தேவன் நம்முடைய இருதயங்களை.. அது உண்மையும், விசுவாசமும், பரிசுத்தமுமாக இருக்கிறதா என்று பார்க்கிறார்.

இவ்விதமாக இன்று உங்கள் ஒவ்வொருவரிடமும் நமது பரலோகப் பிதா அவருடைய வார்த்தைகளின்மூலம் பேசுகிற சத்தத்திற்கு இறுதியாக, நாம் செவிசாய்ப்போம் -

**நீதிமொழிகள் 23:26**

***"என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா,***
***உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக.."***

ஆம்.கிட்டத்தட்ட இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு... இந்த சத்தத்தை இயேசு கேட்டபொழுது, அதற்கு அவருடைய பதில் பின்வருமாறு இருந்ததை வாசிக்கிறோம் -

**சங்கீதம் 40: 8**

***"என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்.***
***உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்"***

இதுவே இயேசுவின் பதிலாக இருந்தது.

***உங்களால் இன்று இந்த வார்த்தைகளை..பரலோகபிதாவின் சத்தத்தை"கேட்கமுடிகிறதா"?***

***அதற்கு இன்று உங்களுடைய பதில் என்ன?***

இன்று அவரிடத்தில் நீங்கள் பதில் அளிக்கையில் கர்த்தர் தாமே தம்முடைய பரிசுத்தஆவியைக் கொண்டு உங்களை பெலப்படுத்துவாராக. ஆமென்



**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**

For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/biblereserch/